PRANAV JOURNAL OF FINE ARTS
ISSN: 2582-9513

# அடவுகள் ஒரு பார்வை

இரா.சிவக்குமார்[1] & முனைவர் வே. வெ   மீனாட்சி [2]

[1]முனைவர் பட்ட ஆய்வு; [2]முதல்வர்
தமிழிசைக் கல்லூரி

**ஆய்வு நோக்கம்:**

அண்டங்கள் அனைத்தும் அசைவது போல் உலகில் உயிர்வாழ் இனங்களும் அசைகின்றன. அசைவு என்பது உயிர்களின் புத்துணர்ச்சி அடைவதற்கு உண்டான ஒரு பயிற்சி என்று கூட கூறலாம். அந்த அசைவானது மனித உடலில் ஏற்படுவதை தான் கூத்து, நடனம் என்ற பெயர்களிட்டு கூறுகின்றனர். அவ்வகை அசைவாகி நிகழ்வானது மனிதனின் மகிழ்ச்சி, துக்கம் இவைகளின் கலவையாக இருந்து வந்தது. இது காலப்போக்கில் நடனம், நாட்டியம் என்ற முறையில் இதற்கு இலக்கணம் செய்து உடலின் (அங்கங்கள்) பாகங்கள் அசைக்கும் முறையை விளக்கமாகவும், முறையாகவும் செய்தனர் அந்த உடல் அசைவை நாட்டியத்தில் 'ஆங்கிகா அபிநயம்' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. பரதநாட்டியத்தில் 'அடவுகள்' என்ற பெயரிட்டு அழைத்தனர். நாட்டியத்தில் அங்க அசைவினால் உண்டாகும் அடவுகளின் அசைவினையும், அவை எவ்வாறு நாட்டியத்தில் பயன்படுத்தி செய்கின்றனர் என்பதையும் ஆராயும் நோக்குடன் இந்த ஆய்வு செய்யப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:**

நாட்டியம், அடவு, நடனம், பாதம், கூத்து, சாத்தனார், சாரி, நாட்டியசாஸ்திரம், நந்திகேஸ்வரர், பரதர், அசைவு, அங்கம், கை, ஜதி, கோர்வை.

**ஆய்வுச் சுருக்கம்:**

அகிலத்தையும், ஆன்மாவையும் ஆட்டுவித்து ஆடுகின்ற ஐயன் திருநடனமே ஆனந்தம் என்று அடியார்கள் பாடினர். அவர் ஆடிய திருநடனத்தை இலக்கணம் செய்தார் பரதர் என்று கூறப்படுகின்றது. அவ்விலக்கண முறையில் ஆங்கிகா அபிநயமான 'அடவுகள்' எவ்விதம் உருவாகின்றன அதன் இலக்கணம முறைகளும், அடவுகளின் உருவாக்க முறைகளையும், தாள, கால அளவுகளில் ஆடப்படும் அடவுகளைக் கூறும் வண்ணமாக அமைகின்றது. பரதசாஸ்திரம், பரதார்ணவம், கூத்த நூல் போன்ற நூல்கள் கூறுவதை அடவுகள் பற்றிய விபரங்களை கூறும்படியாக இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**முன்னுரை**

நாட்டியம் என்ற பெயருடன் விளங்கும் மனித உடலில் இலக்கணமிகு இயக்கத்திற்கு செவ்வியல் நடனம் என்று சொல்லப்படுகிறது. இந்திய நாட்டில் அந்தந்த மாநிலங்களில் வாழ்க்கை முறை, மரபுமுறை பின்பற்றி பலவிதமான நாட்டுப்புற நடனங்களும், செவ்வியல் நடனங்களும் உள்ளன. எந்நடனமாகினும் அதற்கு அடவு என்னும் நிகழ்வானது தாளத்தில் அமைக்கப்பட்டு ஆடப்படும் உடல் இயக்கம் (அங்கஹாரம்) ஆகும். அவ்விதம் உருவான அடவுகள் பற்றிய விபரம் காண்போம்.

அடவுகள் உருவான முறை:

அடவு என்னும் ‘சொல்’ தமிழ்மொழியில் ஆரம்ப நாட்டியச் சொல்லாகும்.இதை 'வேர்ச்சொல்' என்றும் கூறுவர். அடவு உடம்பில் உள்ள தலை, கை, கால், பாதங்கள் இணைப்புகள் இவைகளின் உதவி கொண்டு ஏற்படுத்தப்படும் ஒரு இயக்கம் என்று கூறலாம். இவ்வண்ணம் செய்யப்படும் அடவுகளில் கால்களின் பாதங்களில் அடித்துக் குதித்து, தட்டி, நடந்தும் ஏற்படும் ஒலியின் அமைப்பை வைத்து இவ்வடவுகள் பிரிக்கப்படுகின்றது. ஆனால் அடவுகள் என்றால் காலில் ஒலி எழுப்பும் தாளம் மட்டுமே என்று கூறுவது முறையல்ல. நம் உடலின் அனைத்து உறுப்புகளின் ஒருமித்த தாள, கால வகைக்கு பொருத்தமான ஏற்படுத்தும் இயக்கம் அடவு எனப்படும்.

அடவு என்பது நாட்டியத்திற்கு இன்றியமையாத ஒன்றாகும்.வார்த்தைகள் உருவாக்க எப்படி எழுத்துக்கள் தேவையோ அதுபோல நடனக் கோர்வைகளை உருவாக்க அடவுகள் அவசியம் தேவை என்கின்றனர்.பல அடவுகள் சேர்ந்து அடவுக் கோர்வைகளாய் உருவாக்கப்படுகின்றது.

அடவு என்ற சொல் தமிழ் என்றாலும், தெலுங்கு மொழியில் 'அடுகு' என்ற சொல்லிற்கு 'அடி' என்று பொருள்படுவதாக கூறப்படுகிறது.வடமொழிச் சொல்லான சமஸ்கிருதத்தில் 'குட்டனம்' என்று அழைக்கப்படுகிறது. நாம் சாதாரணமாக நடக்கும் நடையை கூட அடவு என்று சொல்லலாம்.ஏனென்றால் நம் வழக்கில் உள்ள நிகழ்வுகளும், வார்த்தைகளுமே சாஸ்த்திரிய நடனமாக மாற்றப்பட்டுள்ளது என்பதை நாம் உணர முடியும்.

அடவு என்பது நாட்டியத்தின் அடிப்படைக் கூறு என்றும் அடவு என்றால் நாட்டியம் என்றும் பொருள்படும். சாத்தனாரால் இயற்றப்பட்ட கூத்த நூலில்,

**“அடவு அடிதட்ட உடலிடை கைகால்**

**அடிக்கடி அலைந்து மிடுக்கு இடல்; அடவே"**

என்று கூறுகிறார். பாதங்கள் தட்ட மிடுக்கான இலக்கியத்தில் உடல், இடுப்பு, கை, கால், பாதங்கள் ஆகியன ஒருங்கிணைந்து நளினமான அசைவை ஏற்படுத்துவதே அடவு

ISSN: 2582-9513

ஆகும்.முதலில் கூறியது போல் அடவு என்பது தலை முதல் பாதம் வரை செய்யப்படும் இயக்கம் என்பது உறுதியாகிறது.

**அடவு இலக்கணம்**

ஒரு நிலை - ஸ்தானகம் - ஸ்தாகை

சாரி - கால்கள் பாதங்கள் ஆகியவற்றின் இயக்கம்.

அர்த்தபாவம் இல்லாத எழிற்கை (நிருத்த ஹஸ்தம்)

அசைவுகளில் கைகளின் இடம், கை அமைவிடம் என்று சாத்தனாரால் ஏறத்தாழ 14ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நாட்டிய நூலான கூத்த நூலில் அடவுகளின் இலக்கணங்களாக கூறப்படுகிறது மற்றும் சங்கீதா முக்தாவளி என்ற நூலிலும் கரணம் என்றால் அடவு என்று கூறப்படுகிறது.

**அடவு உற்பத்தி ஆகும் முறை :**

அடவுகள் ஒருநிலை (ஸ்தானகம்), சாரி (பாத இயக்கம்), கை முத்திரை அமைவிடம் பற்றி அறிவோம்.

ஸ்தானகம் :

அதாவது அங்கங்கள் அசைவற்ற நிலையில் இருப்பது ஸ்தானகம் அல்லது நிலை. நடன அசைவுகள் ஸ்தானகத்தில் இருந்தே துவங்கி அசைவாகி பின்பு மீண்டும் ஏதோ ஒரு நிலைக்கு வருகின்றது. ஆகவே ஸ்தானகமும் சாரியும் தொடர்புடையதாக இருக்கும்.அதோடு அன்றி 'சாரி' என்ற அசைவுக்கும் எந்த நிலையில் இருந்து ஆட்டம் துவங்க வேண்டும் என்ற ஒரு நிலை தேவைப்படுகிறது.எனவே நிலையும் (ஸ்தானகம்) பாத இயக்கமும் (சாரி) இணைந்தே செயல்படுவது அடவு ஆகும்.

அடவுகள் ஆடப்படும்போது நின்ற நிலை, பாதி அமர்ந்த நிலை (அரைமண்டி) முழுமையாக அமர்ந்த நிலை (முழு மண்டி) போன்ற நிலைகளில் ஆடப்படுகிறது.அடவுகளுக்கு ஸ்தானகம் இன்றியமையாதது என்று கூறப்படுகிறது.

நாட்டிய சாஸ்த்திரத்தில் ஸ்தானகங்கள் மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. அவை நின்ற நிலை, அமர்ந்த நிலை, கிடந்த நிலை என்ற பாகுபாட்டுக்கு உள்ளாகின்றன.நின்ற நிலையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் என்ற சில வேறுபாட்டுடன் பிரத்யேகமான சில ஸ்தானகங்கள் கூறப்படுகிறது.இவை நடனத்தின் தேவைக்கேற்ப இருபாலரும் மாற்றிக் கையாளலாம் என்று கூறப்படுகிறது.

**சாரி :**

அடவுகளின் சேர்க்கைகளில் மிகவும் முக்கியமானது சாரியாகும்.காலினால் மட்டும் செய்யப்படும் நர்த்தனத்தின் பகுதிக்கு சாரி என்று பெயர்.நந்திகேஸ்வரரின் 'பரதார்ணவத்தில்' சாரி இரு வகைப்படும். அவை பூமிச்சாரி, ஆகாசச்சாரி என கூறப்படுகிறது. பரதரின் நாட்டியச் சாஸ்திரத்திலும் சாரி பற்றிய (பாத அசைவு) கூறுகையில் பாதம் முழங்கால்,துடை இவைகள் எல்லாம் சேர்ந்த அசைவுகள் சாரி என்று

ISSN: 2582-9513

சொல்லப்படுகிறது. தரையைத் தொடும் பூமிச்சாரிகள் 16 என்றும் தரையை தொடாத ஆகாச சாரிகள் 16 என்றும் நாட்டிய சாஸ்திரம் கூறுகின்றது.இச்சாரிகளுக்கு மார்கச் சாரிகள் என்று பெயர்.இவைகளே ஆதியில் ஏற்பட்ட சாரிகள் என்று கூறப்படுகின்றது.

**கை முத்திரை அமைவிடம் (ஹஸ்தஷோத்திரம்) :**

அங்கம் (உடம்பு), ப்ரத்யாங்கம் (இணைப்பு), உபாங்கம் பகுதியான கையை அடவில் மிகச் சிறப்பாக கூறப்படுகின்றது. அடவுகள் ஆடும்போது அழகுற இரு கைகளின் அசைவுப் பங்கு முக்கியமாகின்றது.இவ்விதம் அடவுகளில் காட்டப்படும் கை முத்திரைகளுக்கு பொருள் கிடையாது.எனவே இதன் பெயர் எழிற்கை (நிருத்த ஹஸ்தம்) என்று சிலப்பதிகாரத்தில் அழைக்கப்படுகிறது. இவ்வகை எழிற்கைகள் பரதார்ணவத்தில் நந்திகேஸ்வரர் 16 ஆக பிரிக்கின்றார். ஏனைய நூல்களில் மாறுபடுகின்றன.

**கரணம் :**

கை, பாதங்களின் அசைவு, நிலை இவைகளின் கூட்டமைப்பே கரணம் என்கின்றார்பரதர்.கரணங்களின் ஒருங்கிணைப்பே அடவுகள் ஆகும். அதிக எண்ணிக்கை கொண்ட கரணங்களின் கூட்டமைப்பே 'அங்ககாரம்' எனப்படும்.

இவ்வாறு ஏற்பட்ட கரணங்களில் (அடவுகளில்) கூத்திரையன் ஆடிய 108 கரணங்கள் சிவாலயங்களில் காணப்படுகின்றன.

**அங்ககாரம் :**

நூலில் மணிகளை கோர்ப்பது போல கரணங்கள் சிலவற்றை இடையின்றி இணைத்து அபிநயம் செய்வது 'அங்ககாரம்' (உறுப்புகளின் அசைவுகளால் ஆன மாலை) எனப்படும். அங்ககாரம் 32 வகைப்படும்.கரணம் என்பதை அடவு எனவும் அடவுக் கோர்வைகளான அங்ககாரத்தை ஜதி என்றும் ஆன்றோர் கூறுகின்றனர். 32 அங்ககாரங்களும் சில கரணங்களின் தொகுப்பாக அபிநயம் செய்யப்படும். அவ்வண்ணம் ஏற்பட்டது 108 கரணங்கள் ஆகும்.அடவு மட்டுமே பயன்படும் சுத்த நிருத்தத்தில் கை, கால்களின் அசைவுகள் பொருத்தமாக அமைந்திருப்பது கரணங்கள் ஆகும்.

தாளத்திற்கேற்ப அடிகளை வைத்துக் கொண்டே அவற்றிற்கு இணையாக கைகளையும் (நிருத்தக் கை) அசைத்து அபிநயம் செய்வது கரணங்கள் அடவுகள் ஆகும். அடவுகள் நிருத்தத்திற்கு தாய் போன்றவை. கரணங்களால் அதாவது அடவுகளால் தான் சுத்த நிருத்தம் தோன்றியது எனலாம்.(எ.கா.)ஜதிஸ்வரம் தில்லானா.

**கதி அல்லது நடை**

கதி என்பது தாளத்திற்குள் அமைக்கப்பட்டு கால்கள் வைப்பே ஆகும்.அவை திஸ்ரகதி, சதுஸ்ரகதி, மிஸ்ரகதி, கண்டகதி, சங்கீர்ணகதி என்று ஐந்துவித எண்ணிக்கை 'பஞ்ச நடை' என்ற நடையில் பிரிக்கப்பட்டு கால்களில் இவ்வைந்து நடைகள் அடவுகளாக செய்யப்படுகின்றன.இவ்விதமாக நடை என்ற சொல்லிற்கு அடவு என்று தான் பொருள் கொள்ள வேண்டும்.கால் எடுப்பு வைப்பு முறையும் அடவு என்ற அர்த்தமாகின்றது.

ISSN: 2582-9513

இவ்விதத்தில் ஜீவராசிகளின் நடைகளையும் நாட்டியத்தில் உபயோகப்பட்டு வருவதாக பரதர் நந்திகேஸ்வர் இயற்றிய நூல்களில் கூறப்படுகின்றது.அவ்விதம் கூறிய ஜீவராசிகளின் நடை அல்லது கதி பற்றி அறிவோம்.

1. மயூர கதி - மயில் நடை
2. ஹம்ச கதி - அன்ன நடை
3. கிருஷ்ணசார கதி - மான் நடை
4. சிம்ம கதி - சிம்ம நடை
5. கஜ கதி - யானை நடை
6. சுக கதி - கிளி நடை

எனப்படுகிறது.இவ்வண்ணமே கதி நடை என்ற அடவு மிருகம், பறவை இவைகளின் இயற்கை நடையை வைத்து நாட்டியத்தில் உபயோகிக்கின்றோம்.

இம்முறைகளின் வழியே அடவுகள் உருவாகியுள்ளன என்று அறியப்படுகிறது.

கடவுள் முதல் கருவில் உதித்த மனிதன் வரை அடவு கட்டி ஆடுவதை ஆனந்த நிகழ்வாக செய்துள்ளார்கள் என்பதை அறிவோம்.

**“ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காண**

**கண் ஆயிரம் வேண்டாமோ”**

என்ற முத்துத்தாண்டவரின் பாடலை நினைவு கூறுவோம்.

ஜீவராசிகளிலேயே உயரிய படைப்பான மனித உடல் ஆகும்.அவ்வுடலினால் செய்யப்படும் அடவுகள் மிகச் சிறந்த அம்சமாக கூறப்படுகின்றது.

பரத நாட்டியத்தில் அடவுகள் என்று பார்த்தோமேயானால் ஆரம்ப காலம் தொட்டே இருந்திருக்கின்றது. இருப்பினும் அடவுகளை முறைப்படுத்தி தந்தவர்கள் என்ற சிறப்பு பரத சிரேஷ்டர்கள் என்று கூறப்படும் தஞ்சை நால்வரையே சாரும். சின்னய்யா, பொன்னையா, சிவானந்தம், வடிவேலு இந்நால்வர் உருவாக்கிய அடவு முறைகள் 12 வகை அடவுகள் ஆகும். ஒரு அடவுக்கு 10 வீதம் விரிவாக்கம் செய்து மொத்தம் 120 அடவுகள் முதன்மையான அடவுகள் என்று இன்று வரை அனைவரும் கற்று வருகின்றனர்.

பரத நாட்டிய அடவுகள் அளவீட்டு வடிவியலில் வரையப்பட்டகணக்கு வரைபடங்கள் போன்ற கோணங்களை உடையது. எடுக்கும் முறை, வைக்கும் முறை போன்ற காலப்பிரமாண முறையில் அடவுகள் உள்ளது. முன்னுக்குப்பின் முரண்பாடு இல்லாமல் மிடுக்கான தாண்டவ அடவில் குழைவான லாசியம் புகாமலும் லாசியத்தில் தாண்டவம் புகாமலும் தனித்தனியே அடவுகள் அமைக்கப்படுகின்றன.

பரத நாட்டிய அடவுகளில் நிருத்தக் கைகள் என்ற எழிற்கை பலவகை முத்திரைகள் அமைக்கப்பட்டிருக்கும்.இவைகளுக்கு அர்த்தம் இல்லை.பாதங்களில் நாட்டிய சாஸ்த்ரம்

ISSN: 2582-9513

கூறும் இலக்கண முறையில் ஆடப்படும். பரத நாட்டியத்தில் நாட்டியங்களில் கூறப்படும் 108 தாளத்திற்கும் ஜதிக்கோர்வைகள் அடவுகளாக ஆடப்படும்.

(எ.கா) "தத் தை தா ஹா

தித் தை தா ஹா"

என்ற குத்தடவு திஸ்ரம், மிஸ்ரம், சதுஸ்ரம், கண்டம், சங்கீர்ணம் என்ற ஐந்து நடைகளான பஞ்ச நடையில் அமைத்து ஆடப்படும்.இவ்வாறு பரத நாட்டிய அடவுகள் அமைக்கப்படும்.

தற்போது பரத நாட்டியத்தில் பயன்படுத்தப்படும் அடவுகள் சங்கீத சாராமிர்தம் எனும் சமஸ்கிருத நூலை தழுவியுள்ளது.இதன் ஆசிரியர் துளஜா மன்னர்ஆவார்.

பரத நாட்டிய மரபு வழியில் 120 அடவுகள் உள்ளது என்றாலும் அதில் சில மறைந்து போன காரணத்தால் முக்கியமான 75 அடவுகள் மட்டுமே பயன்படுகின்றது என்று தற்கால பரத கலை கோட்பாடு எனும் நூல் ஆசிரியர் கூறுகிறார்.

ஆரம்ப காலம் முதலே பரத நாட்டியத்தில் ஒரே மாதிரியான அடவுகளே ஆடப்பட்டு வந்தன. இவை சதிர் மரபுவழி எனக் கூறப்பட்டது. பிற்காலத்தில் பலவித மாற்றங்கள் ஏற்பட்டு பலவித பாணிகள் என்ற முறையில் அடவுகள் மாற்றப்பட்டு ஆடப்பட்டு வருகின்றது.

**முடிவுரை**

இவ்விதமே அடவுகள் உருவாக்கம் செய்யப்பட்டு நடனங்களில் முறையாக ஆடப்பட்டு வருகின்றது.எவ்வகை நடனத்திற்கு அடவுகள் என்ற ஆணிவேர் இன்றியமையாததாகின்றது.அடவுகளே ஆட்டத்தின் அஸ்திவாரம் எனலாம். அடவுகளின் தரம் குறைந்துவிடுமாயின், ஆடலின் தரம் குறைந்து, நாட்டியக் கலையின் சிறப்பு குன்றிவிடும். எனவே ஆடல் கற்பதன் முன்பு தெளிவுற அடவுகள் கற்றுத் தேர வேண்டும். அவ்விதம் கற்கும் கலைஞர்களே சிறப்பாக மிளிர்கின்றனர் என்பது உண்மை.ஆடற்கலைக்கு அடவுகளே உயிர்நாடி எனலாம்.

**துணை நூல்கள்**


1. நந்திகேஸ்வரர் - பரதார்ணவம் -- பக்கம் 44, 277, 362, 363, 365
2. தொகுப்பாசிரியர் - கே. வாசுதேவ சாஸ்திரிகள் - சரஸ்வதி மஹால் தஞ்சாவூர்
3. சாத்தனார் - கூத்த நூல் , உரை ச . து .சு யோகியார், சாரதா பதிப்பகம் சென்னை.
4. டாக்டர். பத்மா சுப்ரமணியம் - பரதக்கலை கோட்பாடு, பக்கம் 81, 82, வானதி பதிப்பகம் சென்னை 17
5. பேராசிரியர் சுதாராணி ரகுபதி - லகு பரதம், பக்கம் 138, 139, 217, 218, ஸ்ரீ பராதலயா , விக்னேஷ் பிரிண்டர் , சென்னை 600005.